பக்கங்கள்: 09

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 ஆவணி 32 சனிக்கிழமை 17.09.2022 கதிர் 314

**இனி இது ரகசியம் அல்ல!**

உலகப் பணக்காரர்கள் பற்றிய சில தகவல்களை இன்று பரிமாற விரும்புகிறேன்.

அவர்களுக்கு இவ்வளவு சொத்தா என்று பிரமிக்கும் போது நமது வயிறு பொறாமை ☞2

# மக்கள் ஆணையுடன் ஆட்சிப்பீடம் ஏறினால் சகல பிரச்சினைகளுக்கும் விரைந்து தீர்வு!



## இப்படி உறுதியளிக்கின்றார் சஜித்

நாடு எதிர்கொண்டுள்ள அனைத்துப் பிரச்சினைகளுக்கும் பொதுத்தேர்தல் ஊடாகவே தீர்வைக்காண முடியும். ஐக்கிய மக்கள் சக்தி, மக்கள் ஆணையுடன் ஆட்சியமைத்தால் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் விரைந்து தீர்வு கண்டே தீரும்.

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியால் அமுல்படுத்தப்படும் 'மூச்சு' வேலைத்திட்டத்தின் 52 ஆவது கட்டமாக அம்பாறை பொது வைத்தியசாலைக்கு உபகரணங்களை நன்கொடையாக வழங்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. இதில்கலந்துகொண்டு உரையாற்றும் போதே சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

74 ஆண்டுகால அரசியல் குறித்து மக்கள் மத்தியில் ☞2

# இங்கு தேர்தல் நடைமுறைகள் ஊழலும் பலவீனமும் மிக்கவை




## தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் விசனம்

கொழும்பு,செப்ரெம்பர்17

இந்த நாட்டில்தேர்தல் நடைமுறைகள் மிகவும் ஊழல் நிறைந்தவையாகவும், பலவீனமானவையாகவும் காணப்படுகின்றன எனத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் ஜி. புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார். ☞2

# குருந்தூர் மலையில் மக்களின் விவசாய நிலங்கள் சுவீகரிப்பு

## சார்ள்ஸ் எம்.பி. நேரில் விஜயம்

(ந.லோகதயாளன்)

குருந்தூர் மலையின் கீழ் பகுதியில் மக்களின் பல ஏக்கர் விவசாய நிலங்களைத் தொல்பொருள் திணைக்களத்தினர் கடந்த வாரம் சுவீகரித்துள்ளனர் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி ☞2



# வெளிநாடு செல்ல முயன்ற 26 பேர் படகுடன் கைது!

(ந.லோகதயாளன்)

இலங்கையில் இருந்து கடல் மார்க்கமாக வெளி நாட்டுக்குச் செல்ல முயன்றனர் எனச் சந்தேகிக்கப்படும் 26 பேருடன் டிங்கிப் படகு ஒன்று வடக்குக் கடலில் கடற் படையினரால் கைப்பற்றப் பட்டது.

நேற்றுமுன்தினம் இரவு ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த கடற்படைக் கப்பல் வடக்கு கடல் பகுதியில் சந்தேகத் துக்கிடமான வகையில் பயணித்த படகு ஒன்றைக்கண்காணித்துச் சோதனையிட்டது.

இதன்போது, இலங்கையில் இருந்து கடல் மார்க்கமாக வெளிநாடுகளுக்கு ☞2

## வடக்கு ஆளுநர் செயலக முன்றலில்

# அரசியல் கைதிகளின் உறவுகள் போராட்டம்



(ந.லோகதயாளன்)

கொழும்பு – மகசின் சிறைச்சாலையில் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அரசியல் கைதிகளின் உறவினர்கள் வடக்கு மாகாண ஆளுநர் செயலக முன்றலில் நேற்று கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். கடந்த 2017 ஆம் ஆண்டுக்குப் ☞2

# வாகரையில் புலிகளின் வெடிபொருள்கள் மீட்பு!



(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு, வாகரை பொலிஸ் பிரிவிலுள்ள கதிரவெளி பிரதேசத்தில் விடுதலைப்புலிகளின் முகாமான ஜீவன் முகாம் அமைந்திருந்த பகுதியில் நிலத்துக்குள் இருந்து பெருந்தொகையான வெடிபொருள்களை ☞2

# யாழ். நகரில் அதிபர்களுக்கு அறிவிக்காமல் மாணவர்களுக்குக் காலாவதியான தடுப்பூசி




யாழ்ப்பாணத்தில் பைஸர் தடுப்பூசி ஏற்றுவது தொடர்பில் பாடசாலை அதிபர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டிருந்தாலும், அவை காலாவதியானவை என்ற உண்மையை மறைத்தே மாணவர்களுக்கு கடந்த சில நாள்களாக ஏற்றப் பட்டுள்ளன என்ற விவரம் தெரியவந்துள்ளது.

யாழ். நகரப் பாடசாலைகளில் பைஸர் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் ஏற்றாதவர்களும், மூன்றாவது டோஸ் ஏற்ற விரும்புவர்களுக்கும் சுகாதாரத் திணைக்களத்தால் ஊசி ஏற்றல் நடவடிக்கை ☞2

# பைஸர் தடுப்பூசி ஏற்றாவிட்டால் பிள்ளைகள் சாவார்கள் என்று சிங்கள அதிகாரி மிரட்டல்!

பைஸர் தடுப்பூசிகளை ஏற்றாவிட்டால் மாணவர்கள் உயிரிழப்பார்கள் என்று பெற்றோரை அச்சுறுத்தியாவது தடுப்பூசிகளை ஏற்றுங்கள் என்று மருத்துவர்களுடனான கலந்துரையாடலின்போது சிங்கள அதிகாரி ஒருவர் மிரட்டியுள்ளார். ☞2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யால் எரியத்தான் செய்கின்றது. உலகின் முதல் இரண்டு பணக்காரர்களும் நமக்கு அடிக்கடி பெயர் அடிபடும் பிரமுகர்கள்தான்.

முதலாம் நபர் – நம்பர் வன்– எலன் மஸ்க். இப்போது ட்விட்டர் தளத்தை முழுவதுமாகக் கொள்வனவு செய்ய முயன்றமையால் நாம் செய்திகளில் அடிக்கடி உலா வரும் பெயர்.

அடுத்தது அமேசன் உரிமையாளர் ஜெஸ்பிஸோஸைத்தாண்டி இரண்டாவது இடத்துக்கு இப்போது முன்னேறி இருக்கும் நமது பக்கத்து நாட்டுப் பணக்காரர் கௌதம் அதானி.

இதில் எலன் மஸ்கின் சொத்தின் பெறுமதி இன்றைய நிலையில் 273.5 பில்லியன் டொலர் ஆகும்.

அதேபோல கௌதம் அதானின் சொத்தின் பெறுமதி 154.7 பில்லியன் டொலர்.

இந்த பில்லியன் டொலர்களில் நாம் இப்போது அடிக்கடி கணக்குப் பார்ப்பது இலங்கையின் கடன் நிலுவை பற்றிய செய்திகள் விடயங்களைத்தான்.

இந்த இரண்டு உலகப் பணக்காரர்களின் சொத்தை இலங்கையின் மொத்தக் கடனுடன் ஒப்பிட்டுப் பார்க்கத் தோன்றியது.

அதனுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் இலங்கை சர்வதேச சமூகத்திடம் பெற்றுக் கொண்டுள்ள மொத்த கடனான சுமார் 51பில்லியன்டொலருடன் ஒப்பிடும்போது அந்த கடன் தொகையைப் போல ஐந்தரை மடங்கு சொத்தை வைத்திருக்கிறார் எலன் மஸ்க்.

மூன்று மடங்கு தொகையை வைத்திருக்கிறார் கௌதம் அதானி.

இந்தப் புள்ளிவிவரத்தை நோக்கும் போது உங்களுக்கு வயிறு எரியவில்லையா வாசகர்களே...?

இந்த இரண்டு பணக்காரர்களில் யாரேனும் ஒருவர் இலங்கையின் முழுக் கடனையும் பொறுப்பேற்றால் கூட அவர்களுடைய சொத்தில் பேரழிவு வந்து விடப்போவதில்லை.

அந்த இருவருக்கும் முன்னாள் முழு இலங்கையுமே ஒரு தூசுதான்...!

- மின்னல் -

## மக்கள் ஆணை ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலவும் விரக்தி நியாயமானதுதான். இந்நிலையில், ஐக்கிய மக்கள் சக்தி எதிர்க்கட்சியில் இருந்தவாறு அரசை மட்டும் விமர்சிக்காமல், மக்களை வாழ வைக்கவும், எதிர்காலச் சந்ததியினரின் கல்விக்கான வாய்ப்புக்களை விரிவுபடுத்தவும் நடவடிக்கைளை முடிந்தவரை எடுத்து வருகின்றது.

நாட்டின் குடிமக்களை வாழ வைப்பது எம் மீது சுமத்தப்பட்ட சமூகக் கடமை.

நாடு நெருக்கடியான சூழலை எதிர்நோக்கி வரும் இந்நேரத்தில் அமைச்சுக்களைப் பெற்று மக்களுக்கு மேலும் சுமைகளை அதிகரிப்பதை விடுத்து, எதிர்க்கட்சியில் இருந்து கொண்டு நாட்டு மக்களுக்கு வழங்க முடியுமான உயர்ந்தபட்ச உதவிகளை வழங்குகின்றோம்.

நாட்டின் வைத்தியசாலைக் கட்டமைப்பு நெருக்கடியை எதிர்நோக்கும் இத்தருணத்தில், 'மூச்சு' வேலைத்திட்டத்தின் ஊடாக நாட்டு மக்களின் உயிரைக் காக்க எதிர்க்கட்சியாக நானும், சக நாடாளுமன்ற உறுப்பினர் குழுவும் எப்போதும் முன் நிற்கின்றோம்.

தற்போதைய ஜனாதிபதி பிரதமராக இருந்தபோது நாட்டைக் கட்டியெழுப்ப உதவுமாறு கேட்ட சந்தர்ப்பத்தில் பதவிகளை எடுக்காமல் சுகாதாரம் ,கல்வித்துறைகளை கட்டியெழுப்ப உதவுவதாக நன் உறுதியளித்தேன்.

சுகாதாரத் துறைக்கு மூச்சுத் திட்டமும், கல்வித் துறைக்கு பிரபஞ்சம் தகவல் தொழில்நுட்பத் திட்டமும் தொடங்கப்பட்டு, இதனூடாக எதிர்க்கட்சி என்ற ரீதியிலும் எமது கடமைகளையும் பொறுப்புகளையும் நிறைவேற்றுகின்றோம்.

அமைச்சர்களுக்காக ஒதுக்கப்பட்ட பணத்தைச் சுகாதாரத்துறைக்குப் பயன்படுத்துவதன் மூலம் பல உயிர்கள் காப்பாற்றப்படும்.

ஐக்கிய மக்கள் சக்தி எதிர்க்கட்சியாக, குறைந்த செலவில் அதிக வேலைகளைச் செய்து தமது சமூகப் பொறுப்பை நிறைவேற்றுவதையே இந்நேரத்தில் மேற்கொண்டு வருகின்றது – என்றார்.

## யாழ்.நகரில் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதற்குப் பயன்படுத்தப்படும் பைஸர் தடுப்பூசி கடந்த ஜூலை மாதம் 31ஆம் திகதியுடன் காலாவதியாகியுள்ளது.

இருப்பினும் உலக சுகாதார நிறுவனத்தின் அறிவுறுத்தலுக்கு அமைவாக அதனை எதிர்வரும் ஒக்ரோபர் 31ஆம் திகதி வரையில் பயன்படுத்த முடியும்என்றுசுகாதார அமைச்சுசுற்றறிக்கை ஊடாகத் தெரியப்படுத்தியிருந்தது.

இந்தநிலையில், வடக்கு மாகாணத்தில் காலாவதியான தடுப்பூசியை ஏற்றும் செயற்பாட்டை வடக்கு மாகாண முன்னாள் சுகாதார பணிப்பாளராக இருந்த மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தவிர்த்து வந்தார். புதிய சுகாதாரப் பணிப்பாளராக மருத்துவர்திலிப்லியனகேநியமிக்கப்பட்ட பின்னர் அந்த நடவடிக்கை துரிதப்படுத்தப்பட்டிருந்தது.

பாடசாலை மாணவர்களுக்கோ, அவர்களின் பெற்றோருக்கோ, அதிபர்களுக்கோ காலாவதியான தடுப்பூசி ஏற்றப்படுகின்றது என்ற தகவல் தெரிவிக்கப்படாமல் தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

ஊடகங்கள் இந்த நடவடிக்கையை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்ததையடுத்து சில பெற்றோர் பாடசாலை அதிபர்களிடம் இது தொடர்பில் கேள்வி எழுப்பினார்கள் என அறியமுடிகின்றது.

## பைஸர் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையிலேயே வடக்கு மாகாணத்தில்தான் 4ஆவது டோஸ் ஏற்றியவர்கள் குறைவாக உள்ளார்கள் என்று சிங்கள அதிகாரி தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதும் 4ஆவது டோஸை – காலாவதியான பைஸரை, 0.8 சதவீதத்தினரே இதுவரை ஏற்றியுள்ளனர். இந்தத் தகவலை மறைத்து மேற்கண்டவாறு அந்த அதிகாரி கூறியுள்ளார்.

இதேவேளை, தடுப்பூசி தொடர்பான விடயங்களில் இதுவரை காலமும் எந்தவொரு கடிதங்களோ, அறிவுறுத்தல்களோ, சுற்றறிக்கைகளோ அனுப்பாத வடக்கு மாகாண பிரதம செயலர் சமன் பந்துலசேன, காலாவதியான தடுப்பூசி ஏற்றப்படாமல் இருப்பது தொடர்பில் வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்துக்குக் கடிதம் அனுப்பியுள்ளார்.

காலாவதியான தடுப்பூசியை ஏற்ற முடியும் என்ற சுகாதார அமைச்சின் சுற்றறிக்கையையும் இணைத்து அவர் அந்தக் கடிதத்தை அனுப்பியுள்ளார்.

## அரசியல்........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிற்பட்ட காலப் பகுதியில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட 12 அரசியல் கைதிகளை நீதிமன்றத்தில் முற்படுத்தாது – விசாரணைகளை மேற்கொள்ளாது தொடர்ச்சியாகத் தடுத்து வைத்துள்ளதற்கு எதிர்ப்புத் தெரிவித்து உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் நிலையில் குறித்த 12 அரசியல் கைதிகளின் உறவினர்களும் வடக்கு மாகாண ஆளுநர் செயலக முன்றலில் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

## வெளிநாடு........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சட்ட விரோதமாக செல்ல முயன்றனர் எனச் சந்தேகிக்கப்படும் டிங்கிப் படகுடன் 18 வயதுக்கு மேற்பட்ட 12 ஆண்கள், 4 பெண்கள், 18 வயதுக்குட் பட்ட 10 சிறுவர்கள் உட்பட 26 பேர் கைது செய்யப்பட்டனர்.

## குருந்தூர்........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலாதனுக்கு அப்பகுதி மக்கள் எடுத்துக் கூறியதன் பிரகாரம் நேற்று அப்பகுதிக்கு நாடாளுமன்ற உறுப்பினர் விஜயம் செய்து தொல்பொருள் திணைக்களத்தினர் சுவீகரித்துள்ள காணிகளைப் பார்வையிட்டார்.

உடனடியாகச் சம்பந்தப்பட்ட அமைச்சரைத் தொடர்புகொண்ட சார்ள்ஸ் எம்.பி., புதிதாக தொல்பொருள் திணைக்களத்தினர் மக்களின் விவசாய நிலங்களைச் சுவீகரித்துள்ளனர் எனவும், இதனால் இப்பகுதி விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரியப்படுத்தினார்.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் இப்படியான செயற்பாடுகள் தொடர்ந்தும் மக்களை வாழ்வாதாரங்களைப் பாதிக்கும் எனவும் அமைச்சருக்குச் சார்ள்ஸ் எம்.பி. தெளிவுபடுத்தினார்.

இது தொடர்பாக உடனடியாகத் தான் விவசாயிகள் பாதிக்கப்படாத வகையில் நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் உறுதியளித்தார்.

## வாகரையில் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று விசேட அதிரடிப் படையினர் மீட்டனர் என்று வாகரை பொலிஸார் தெரிவித்தனர். வாழைச்சேனை நீதிமன்ற மேலதிக நீதிவான் ரி.கருணாகரன் முன்னிலையில் இந்த வெடிபொருட்கள் மீட்கப்பட்டன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வாகரை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## இங்கு தேர்தல் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல் கட்சிகளில் உள்ளக ஜனநாயகம் உள்ளதா என்ற சந்தேகம் தனக்கு இருப்பதாகத் தெரிவித்த அவர், சில அரசியல் கட்சிகளில் அதிகாரம் ஒரே இடத்தில் இருப்பதாகவும் சுட்டிக்காட்டினார்.

சர்வதேச ஜனநாயகத் தின கொண்டாட்டம் கொழும்பு தாஜ் சமுத்ரா ஹோட்டலில் நேற்று முன்தினம் இடம்பெற்ற போதே புஞ்சிஹேவா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சிலர் தேர்தலில் பெரும் தொகையைச் செலவு செய்கிறார்கள், ஆனால் சில வேட்பாளர்கள் சுவரொட்டி கூட ஒட்ட முடியாதுள்ளனர்

தேர்தலில் பணச் செலவுகளைக் கட்டுப்படுத்தும் அதிகாரங்கள் இருக்க வேண்டும். அதற்கான செலவினக் கட்டுப்பாட்டுச் சட்டமூலம் நாடாளுமன்றத்தில்சமர்ப்பிக்கப்பட்டுநிறைவேற்றப்பட்டுள்ளதாகவும் புஞ்சிஹேவா மேலும் தெரிவித்தார்.

இதேவேளை தற்போது தேர்தலில் தபால் மூலம் வாக்களிக்கத் தகுதியுடையவர்கள் தவிர, ஆடைத் தொழிற்சாலை ஊழியர்கள், வெளிநாட்டவர்கள், வாக்களிக்கும் உரிமை உள்ளவர்கள், மருத்துவமனை ஊழியர்கள், பத்திரிகையாளர்கள் உள்ளிட்ட பல பிரிவினருக்கும் தேர்தல் நாளுக்கு முன்னதாக வாக்களிக்கும் வாய்ப்பை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் புஞ்சிஹேவா கூறினார்.







# மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கான நிலையம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் திறந்துவைப்பு



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கான நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட கட்டடத் தொகுதியின் கீழ்த் தளத்தில் உருவாக்கப்பட்ட இந்த மாற்றுத் திறனாளிகளுக்கான நிலையம் கடந்த வியாழக்கிழமை காலை 9.30 மணியளவில் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறி சற்குணராஜாவால் திறந்து வைக்கப்பட்டது.

பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கும் சம வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையிலும் ஊக்குவிக்கும் முகமாகவும் அவர்களின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்வதற்காகவும், இந்த நிலையம் திறந்து வைக்கப்பட்டது. திறப்பு விழாவில் கலைப் பீடாதிபதி கே.சுதாகர், வாழ்வக இயக்குநர் ஆ.ரவீந்திரன் ,விரிவுரையாளர்கள், மாணவர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். உலக வங்கியின் செயற்றிட்டத்தில் ஒரு கோடியே 80 லட்சம் ரூபா செலவில் அமை இந்நிலையம் மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கு வரப்பிரசாதமாக அமையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

# 12 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களின் மூளை வளர்ச்சிக்கு தொலைபேசி பாவனை பாதிப்பு!

கையடக்கத் தொலைபேசி பாவனையால் 12 வயதுக்குட்பட்ட சிறுவர்களின் மூளை வளர்ச்சிக்கும் பார்வைக்கும் பாதிப்பு ஏற்படும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வைத்திய ஆலோசகர் வைத்தியர் வருண குணதிலக்க இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

இதற்கமைய 12 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் ஒரு நாளைக்கு 02 மணி நேரம் மட்டுமே கையடக்கத் தொலைபேசிகளைப் பயன்படுத்த அனுமதிக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஒன்று முதல் 12 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் கையடக்கத் தொலைபேசிகளுக்கு அடிமையாவதால் கவனம் செலுத்துவதில் சிக்கல்கள், எரிச்சல், ஆக்ரோமான நடத்தை மற்றும் தனிமைப்படுத்தப்படுதல் ஆகியவை ஏற்படுகின்றன.

அதேபோன்று சரியான முடிவுகளை எடுக்கும் திறனையும் பாதிக்கின்றது என வைத்திய ஆலோசகர் வைத்தியர் வருண குணதிலக்க தெரிவித்துள்ளார்.

இருப்பினும், சிறுவர்கள் மற்றும் பெரியவர்கள் கணினி அல்லது மடிக்கணினி பயன்படுத்தும் திரை மற்றும் கண்களுக்கு இடையே 18 அங்குல இடைவெளியை பராமரிப்பது கணினியைப் பயன்படுத்த மருத்துவ ரீதியாக பரிந்துரைக்கப்பட்ட முறையாகக் கருதப்படுகிறது எனவும் அவர் கூறியுள்ளார்.

எனவே, சிறுவர்கள் தங்கள் படிப்புக்கு கணினி அல்லது அதேபோன்ற அகலமான திரையைப் பயன்படுத்த அறிவுறுத்தப்படுகிறது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கையடக்கத் தொலைபேசிகளின் பாவனை சிறுவர்கள் மற்றும் பெரியவர்கள் இருவருக்கும் கடுமையான உடல்நலப் பிரச்சினைகளை ஏற்படுத்துவதாகவும் வைத்திய ஆலோசகர் வைத்தியர் வருண குணதிலக்க தெரிவித்துள்ளார்.

ஆரோக்கியமான உடலைப் பேணுவதற்கு, சிறுவர்கள் அல்லது பெரியவர்கள் இரவில் ஏழு மணிநேரம் தூங்குவது அவசியம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உறங்கும் முறையில் ஏற்படும் மாற்றங்கள் அதிக கொலஸ்ட்ரோல், உடல் பருமன் ஆகிய விடயங்களில் மாற்றங்களை ஏற்படுத்தும் எனவும் அவர் மேலும் எச்சரித்துள்ளார்.



காலைக்கதிர்
Kalaikkathir

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## பிரேரணையை இறுக்குங்கள்!

ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் 51ஆவது அமர்வின் ஓர் அங்க நிகழ்வாக நேற்று இலங்கை விடயங்கள் குறித்து ஆராய்கின்ற மூடிய நிலை கூட்டத்தில் கவுன்ஸிலின் பிரதிநிதிகள் மத்தியில் இலங்கைப் பிரதிநிதிக்கு மேலதிகமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏசுமந்திரன் எம்.பியும் சில முக்கிய கருத்துகளை முன் வைத்திருக்கிறார். அது அவரின் தனிப்பட்ட கருத்தாகக் கொள்ளத் தேவையில்லை. ஒட்டுமொத்த தமிழினத்தினதும் தமிழர் தரப்பினதும் நிலைப்பாடும் கூட அதுதான்.

▶ யுத்தம் முடிந்து 13 ஆண்டுகள் கடந்த பின்னரும் இலங்கை உண்மைகளைக் கண்டறிந்து, பொறுப்புக் கூறல் மற்றும் நீதியை நிலைநாட்டி, மீள நிகழாமையை உறுதிப்படுத்தி, அதிகார பகிர்வு விடயங்களில் காத்திரமான முன்னகர்வை மேற்கொள்ள எத்தகைய காத்திரமான நடவடிக்கையையும் முன்னெடுக்கவில்லை. இந்தப் பின்புலத்தில் கால அவகாசம் கோரும் கொழும்பின் கோரிக்கையை பரிவோடு கவனிக்க வேண்டிய தேவையோ நியாயமோ இல்லை.

▶ கவுன்ஸிலின் தீர்மானத்திற்கு தானே அனுசரணைப் பணி வகித்து, தானும் சேர்ந்து நிறைவேற்றிய வாசகங்களிலிருந்து பின்வாங்கி விட்டதாக கொழும்பு அறிவித்துவிட்டது. ஆட்சி மாற்றத்தால் வந்த கேடு என்று புறந்தள்ளி போக முடியாத விடயம் இது. ஏனெனில் அந்த 30/01 தீர்மானத்தை இலங்கையும் சேர்ந்து அனுசரணை பணி வகித்து நிறைவேற்றுவதற்கு காரணமான அரசின் பிரதமரே நாட்டின் இப்போதைய ஜனாதிபதி. அப்போதைய நீதி அமைச்சரே இப்போதைய நீதி அமைச்சரும் இந்த கவுன்ஸிலுக்கான அமர்வின் இலங்கை பிரதிநிதியும் ஆவார்.

இப்படித் தீர்மானத்தை சேர்ந்து நிறைவேற்றுவதற்கான அனுசரணைப் பங்களித்த அரசியல் தலைவர்கள் மீண்டும் அதிகாரத்துக்கும் பதவிக்கும் வந்துள்ள போதும், இடையில் வந்த அரசினால் அனுசரணைப் பொறுப்பில் இருந்து வெளியேறிய நிலைப்பாட்டை இந்தத் தலைமை இன்னும் மாற்றவில்லை. அனுசரணைப் பங்கில் இருந்து வெளியேறியதை இந்தத் தலைமையும் மீண்டும் வலியுறுத்தியுள்ளது. இதன் அர்த்தம் அனுசரணை பங்களித்த காலத்தில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலை இலங்கை உண்மையில் ஏமாற்றி உள்ளது என்பதுதான். அத்தகைய ஏமாற்றும் தரப்புகளின் கால அவகாசக் கோரிக்கையை கவுன்ஸில் கவனத்தில் எடுப்பதில் அர்த்தமில்லை.

▶ ஆகவே இலங்கையை இன்னும் நெருக்குவாரத்தில் தள்ளக்கூடிய – பொறுப்புக் கூறல் விடயத்தில் கொழும்புக்கு மேலும் கடும் அழுத்தம் தரும் விதத்திலான – புதிய தீர்மானம் அமைய வேண்டும். இப்போதைய வரைவின் வீச்சு போதுமானது அல்ல.

▶ அதிகாரப் பகிர்வை முன்னெடுப்பதில் கடந்த 13 ஆண்டுகளில் இலங்கை காத்திரமாக எதுவும் செய்யவே இல்லை என்று இந்தியா சுட்டிக்காட்டி உள்ள விடயம் மிக முக்கியமானது. அந்த விடயத்தை இம்முறை நகல் பிரேரணையின் முன்னுரையில் சேர்த்திருப்பது நல்லதுதான். ஆனால் அது போதுமானதல்ல. அதிகாரப் பகிர்வு விடயத்தில் கொழும்பு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்பது ஒவ்வொரு அமர்வின் போதும் ஒவ்வொரு அடி அடியாக ஆராயப்பட வேண்டியது கட்டாயம். அதனால் இந்த விடயத்தை – அதிகார பகிர்வு விவகாரத்தில் எதுவும் செய்யப்படவில்லை, அதில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்ற வலியுறுத்தலை – பிரேரணையின் செயல்பாட்டு பந்தியில் ஓர் அம்சமாகச் சேர்த்துக் கொள்வது அவசியம்.

– இயன்ற அளவு இலங்கையை இறுக்கும் நிலைக்கு பிரேரணையை வலிதாக்க சுமந்திரன் குறிப்பிட்ட இது போன்ற அம்சங்களை அதில் சேர்ப்பதற்கு இணை நாடுகள் முன் வர வேண்டும்.

## விவசாய அமைச்சரின் கருத்தை நிராகரித்த வர்த்தக அமைச்சர்!

வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் அரிசி மனித பாவனைக்கு ஏற்றதல்ல என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்த கருத்தை வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ நிராகரித்துள்ளார்.

நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படும் சகல அரிசிகளும் மனித பாவனைக்கு ஏற்றவை என அனைத்துப் பரிசோதனைகளிலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். எனினும், விவசாய அமைச்சர் எந்த அடிப் படையில் அவ்வாறு அறிக்கை வெளியிட்டார் எனத் தெரியவில்லை எனவும், அவ்வாறான அறிக்கை தம்மிடம் இருந்தால் அதனை அவர் முன் வைக்க வேண்டும் எனவும் வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கால்நடை தீவனத்துக்காக இலங்கைக்கு அரிசி இறக்குமதி செய்யப்படவில்லை எனவும் வர்த்தக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

## ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கத் திட்டம்!




அனைத்து அரசாங்கப் பாடசாலைகளின் ஆரம்பப் பிரிவிலும் உள்ள மாணவர்களுக்கும் மதிய உணவு வழங்க விவசாய அமைச்சு திட்டமிட்டுள்ளது. ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பால் வழங்கப்பட்ட 2 கோடியே 70 லட்சம் அமெரிக்க டொலர் நிதியில் இந்தத் திட்டம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

இந்த மதிய உணவில் பாடசாலை மாணவர்களின் ஊட்டச்சத்தை அதிகரிக்க போலிக் அமிலம், இரும்புச்சத்து மற்றும் விற்றமின்கள் அடங்கியதாக திட்டமிடப்பட்டுள்ளது.

நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடி மற்றும் உணவுப் பொருள்களின் விலையேற்றம், உணவுப் பற்றாக்குறை என்பன பாடசாலை மாணவர்களின் போசாக்கு விடயத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பதால், ஆரம்பப் பிரிவுகளில் உள்ள பிள்ளைகளின் போசாக்கை உறுதிப்படுத்தும் வகையில் உணவு வழங்கப்ப டவுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

## வெளிவிவகார அமைச்சின் தூதுரக சேவைப் பிரிவின் சரிபார்ப்பு, சான்றளிப்பு பிரிவுகளின் சேவை முடக்கம்!

வெளிவிவகார அமைச்சின் தூதுரக சேவைப் பிரிவின் சரிபார்ப்பு மற்றும் சான்றளிப்பு பிரிவுகளின் சேவைகள் மறு அறிவித்தல்வரை இடைநிறுத்தப்பட்டுள்ளன.

வெளிவிவகார அமைச்சால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கணினிக் கட்டமைப்பில் ஏற்பட்டுள்ள கோளாறு காரணமாகவே இந்த சேவைகள் மறு அறிவித்தல்வரை இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இதற்கமைய, கொழும்பு 01 இல் உள்ள வெளிவிவகார அமைச்சின் தூதுரக சேவைப் பிரிவிலும், யாழ்ப்பாணம், திருகோணமலை, கண்டி, மாத்தறை மற்றும் குருநாகல் முதலான பிராந்திய அலுவலகங்களிலும் சரிபார்ப்பு மற்றும் சான்றளிப்பு பிரிவுகளின் சேவைகள் மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தப்பட்டுள்ளன.

கணினிக் கட்டமைப்பில் ஏற்பட்டுள்ள கோளாறை சீராக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன், மேற்படி சேவைகள் மீள ஆரம்பிக்கப்பட்டதும் பொதுமக்களுக்கு அறியப்படுத்தப்படும். எவ்வாறிருப்பினும், ஏனைய தூதரக சேவைகள் எவ்வித தடையுமின்றி இடம் பெறும் என வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

அதேநேரம், ஏனைய சேவை பெறுநர்கள், தங்களின் சேவைகளின் சாத்தியக்கூறுகள் தொடர்பாக அறிந்து கொள்ள தொலைபேசி இலக்கங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

**கொழும்பு தூதுரக சேவைப் பிரிவு 0112 33 88 12 அல்லது 0112 33 88 43**

**யாழ்ப்பாணம் பிராந்திய அலுவலகம் - 021 22 15 970**

**திருகோணமலை பிராந்திய அலுவலகம் - 026 22 23 182**

**கண்டி பிராந்திய அலுவலகம் - 0812 38 44 10**


**குருநாகல் பிராந்திய அலுவலகம் - 0372 22 59 41**

## குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தின் பிரதேச அலுவலகங்கள் 19 ஆம் திகதி திறந்திருக்கும்!

எதிர்வரும் 19ஆம் திகதி அரச பொது விடுமுறையாக அறிவிக்கப்பட்டுள்ள போதிலும், குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தின் பிரதான மற்றும் பிரதேச அலுவலகங்கள் திறந்திருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. குடிவரவு குடியகல்வு திணைக்களத்தால் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், ஒருநாள் மற்றும் வழமையான சேவையின் கீழ் கடவுசீட்டுக்களைப் பெற்றுக்கொள்ள முன்கூட்டிய பதிவுகளை மேற்கொண்டவர்களுக்கு மாத்திரமே எதிர்வரும் 19 ஆம் திகதி சேவைகள் முன்னெடுக்கப்படும் எனக் குறிப்பிடப்படுகின்றது.

முன்கூட்டிய பதிவுகளை மேற்கொள்ளாதவர்களை எதிர்வரும் 19ஆம் திகதி அலுவலகத்துக்கு வருகை தர வேண்டாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# கிளிநொச்சியில்

# ஐஸ்வர்யம்

## பெருவிருந்து மண்டபம்

## Ishwaryam Banquet Hall



Tel:- 021 228 3701, 071 7354308

Whatsapp:- 071 7736 4308

No.315, Kandy Road,
Kilinochchi



- அன்பான வரவேற்பு
- தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
- இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
- இந்தியன் உணவுவகைகள்
- Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.

சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்

# ISHWARYAM BANQUET HALL

## BANQUET MEALS HALL





### FULL OPTION

**MAIN DIHES**

Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style

**DESSERT**

| | |
|---|---|
| ice Cream Cup | - 60/= |
| Fruit Salad | - 60/= |
| I ce Cream & Fruit Salad | - 100/= |
| Cream Caramel | - 120/= |

**SPECIAL MENU PACKAGE**

**BEVERAGES**

| | |
|---|---|
| jUICE 200 ml | - 70/= |
| Milk Drink | - 70/= |
| Cocacola M | - 70/= |
| Pepsi M | - 70/= |
| Swchpees Tin | - 250/= |
| Coca Cola Tin | - 250/= |

காலைக்கதிர் Kalaikkathir

# உலர் வலய விவசாயம் பற்றிய சர்வதேச ஆய்வுமாநாடு யாழ்.பல்கலையில் நடந்தது!

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாய பீடத்தால் வருடாந்தம் நடத்தப்படும் உலர் வலய விவசாயம் பற்றிய சர்வதேச ஆய்வு மாநாடு கடந்த புதன்கிழமை கிளிநொச்சி – அறிவியல்நகர் வளாகத்தில் அமைந்துள்ள விவசாயபீட மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாய பீடம், வடக்கு – கிழக்கை மையப்படுத்தி உலர் வலய விவசாயம் பற்றிய சர்வதேச ஆய்வு மாநாட்டை 2015 ஆம் ஆண்டு முதல் வருடம் தோறும் நடாத்தி வருகிறது. அந்த வரிசையில், அதன் எட்டாவது மாநாடு கடந்த புதன்கிழமை விவசாய பீடாதிபதி கலாநிதி எஸ். வசந்தரூபா தலைமையில் இடம்பெற்றது.

'உணவுஉற்பத்தியில்தன்னிறைவைஅடைவதற்காக வளர்ந்து வரும் பொருத்தமான விவசாயத் தொழில்நுட்பங்கள்' ('Emerging Appropriate Agro‡technologies Towards Food Sustainability) ') என்ற தொனிப் பொருளில் இடம்பெற்ற இந்த ஆய்வு மாநாட்டில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறீசற்குணராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். ஜப்பான் கய்சு பல்கலைக்கழகத்தின் வாழ்நாள் பேராசிரியர் ஒகடா கைசு ஜப்பானில் இருந்து வருகை தந்து பிரதான பேச்சாளராக் கலந்து கொண்டு, 'ஜப்பானின் ஸ்மார்ட் விவ சாயம் : ஒரு பார்வையும் அதன் போக்கும்' (Smart Agriculture' in Japan: An Over view of the Trend) எனும் தலைப்பில் முதன்மைப் பேருரையாற்றினார்.

இவ்வாய்வு மாநாட்டில் இலங்கை மற்றும் சர்வதேச ஆய்வாளர்களால் பயிராக்கவியல், விவசாய உயிரியல், விலங்கு விஞ்ஞானம், மண், சூழல் மற்றும் பொறியியல் விஞ்ஞானம், உணவு விஞ்ஞானமும் தொழில்நுட்பமும், நீர், பொருளாதாரம் மற்றும் அறிவூட்டல் ஆகிய உபதொனிப் பொருள்களில் 48 ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப் பிக்கப்பட்டன.

# பயங்கரவாதத் தடைச்சட்டத்திற்கு எதிராக சாணக்கியன் உண்ணாவிரதப் போராட்டம்!



பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் கைது செய்யப்பட்டு மகசீன் சிறைச்சாலையில் உண்ணாவிதமிருக்கும் கைதிகளுக்கு ஆதரவு தெரிவித்து 'பயங்கரவாத சட்டத்தை ஒழிப்போம்' எனும் தொனிப் பொருளில் மட்டக்களப்பு காந்தி பூங்காவில் நேற்று (வெள்ளிக்கிழமை) அடையாள உண்ணாவிரத போரட்டமொன்று முன்னெடுக்கப் பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியனின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் நடைபெற்;றது.

இந்தப் போராட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களானஞா.சிறிநேசன், பா.அரியனேத்திரன், முன்னாள் அரசாங்க அதிபர் உதயகுமார் மற்றும் அரசியல்வாதிகள், வண.பிதாக்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கட்சி ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதில், பயங்கரவாதத் தடைச்சட்டத்தை ஒழிக்க வேண்டும், பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் கைது செய்யப்பட்ட அரசியல்கைதிகளை விடுதலை செய்ய வேண்டும், சிறையில் உண்ணாவிரத மிருக்கு கைதிகளை விடுவிக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.



# தாமரைக் கோபுரத்தைப் பார்வையிடுவதற்கு 1,400 முதல் 2,000 பேருக்கு தினசரி அனுமதி

கொழும்பு தாமரைக் கோபுரத்தை பார்வையிட நேற்று (வெள்ளிக்கிழமை) முதல் நாள் ஒன்றுக்கு 1400 முதல் 2000 பேருக்கு நுழைவுச்சீட்டு வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பொது மக்கள் ரூபா 500 மற்றும் ரூபா 2,000 கட்டணங்களில் நுழைவுச்சீட்டுகளை பெற்றுக்கொள்ள முடியுமென அறிவிக் கப்பட்டுள்ளது.


மேலும் பாடசாலை மாணவர்களுக்கான நுழைவுச்சீட்டு கட்டணம் 200 ரூபாவெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வெளிநாட்டினருக்கான நுழைவுச்சீட்டு கட்டணம் 20 அமெரிக்க டொலராகுமெனத் தெரிவிக்கப்பட் டுள்ளது.

வார நாட்களில் பிற்பகல் 2.00 மணி முதல் இரவு 10.00 மணி வரையிலும் சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்களில் மதியம் 12.00 மணி முதல் இரவு 10.00 மணி வரையிலும் மக்கள் தாமரைக் கோபுரத்தை பார்வையிடலாம்.

கொழும்பு தாமரைக் கோபுரம் இன்று முதல் மக்கள் பாவனைக்காக திறந்துவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலக்கியத் திறனாய்வாளர் கே.எஸ்.சிவகுமாரன் காலமானார்!



புகழ்பெற்ற இலக்கியத் திறனாய்வாளரும் ஊடகத்துறையில் பன்முக ஆளுமை மிக்கவருமான கே.எஸ். சிவகுமாரன் வியாழக்கிழமை இரவு காலமானார்.

இலங்கையின் மூத்த அறிவிப்பாளர், இலக்கியவாதி, விமர்சகர், எழுத்தாளர், திறனாய்வாளராக தமிழிலும் ஆங்கிலத்திலும் தேர்ச்சியும் தெளிவும் கே.எஸ். சிவகுமாரன் பெற்றிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# ஈ.பி.டி.பி. உறுப்பினர்களின் எதிர்ப்பையும் மீறி வேலணை பிரதேசசபையில் திலீபனுக்கு அஞ்சலி!

வேலணை பிரதேச சபையில் தியாக தீபம் திலீபனின் அஞ்சலி நிகழ்வை ஈழ மக்கள் ஜனநாயக கட்சி புறக்கணித்ததுடன், சபையையும் தவிசாளர் ஒத்தி வைத்தார்.

வேலணை பிரதேச சபையின் மாதாந்த சபை அமர்வு வியாழக்கிழமை சபை மண்டபத்தில் நடைபெற்றது.

அதன் போது, சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தியாக தீபம் திலீபனுக்கு அஞ்சலி செலுத்த முற்பட்ட வேளை ஈழமக்கள் ஜனநாயக கட்சியினர் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர்.

அதேவேளை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியை சேர்ந்தவரே தவிசாளராக உள்ளமையால் அவர் சபை அமர்வை ஒத்திவைத்தார். அதனை அடுத்து ஈழமக்கள் ஜனநாயக கட்சியினர் சபையில் இருந்து வெளியேறிய நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தியாக தீபத்துக்கு சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர்.



**'கம்பவாரிதி' இலங்கை ஜெயராஜ் தமது 'உகரம்' இணையத்தளத்தில் 'பாட்டும் நானே! பாவமும் நானே!' என்ற தலைப்பில் வாராந்தம் வரையும் கேள்வி – பதில் பகுதி 'காலைக்கதிர்' நாளிதழில் ஒவ்வொரு வாரமும் வெளியாகி வாசகர்களின் அறிவுக்குத் தீனியாகிறது.**

# பாட்டும் நானே? பாவமும் நானே!




**1. கேள்வி:-**
மறைந்த பிரிட்டிஷ் மகாராணியார் பற்றி?

**பதில் :-**
அதிர்ஷ்ட தேவதை திரும்பிப் பார்த்ததால், அரச கட்டிலில் ஏறும் பாக்கியம் பெற்றவர் இவர். தனது தாத்தாவின் ஆட்சியின் போது, எலிசபெத் தனது மாமா எட்வர்ட், மற்றும் தனது தந்தை ஆகியோருக்குப் பின்னால், பிரித்தானிய முடிக்கான வாரிசு வரிசையில் மூன்றாவது இடத்தில்தான் இருந்தார். எட்வர்ட் இளமையாக இருந்ததாலும், எட்வர்ட் திருமணம் செய்து குழந்தைகளைப் பெற வாய்ப்பிருந்ததாலும், எலிசபெத் இராணியாக வருவார் என்று எவரும் எதிர்பார்க்கவில்லை.

எலிசபெத்தின் தாத்தா 1936 இல் இறந்தபோது, அவரது மாமா, எட்டாம் எட்வர்டு என்ற பெயரில் முடிசூடினார். இதனால் எலிசபெத் தனது தந்தைக்குப் பிறகு அரியணை ஏறும் தகுதியினைப் பெற்றார்.

அரசரான எட்வர்ட் 1936 ஆம் ஆண்டின் பிற்பகுதியில்,



விவாகரத்துப் பெற்றவரும், சமூகவாதியும், அமெரிக்கருமான தனது காதலியைக் கைப்பிடிப்பதற்காக அரச பதவியை விட்டு விலகினார். இதன் காரணமாக, எலிசபெத்தின் தந்தை அரசராகி, ஆறாம் ஜார்ஜ் என்ற ஆட்சிப் பெயரைப் பெற்றார்.

எலிசபெத்துக்குச் சகோதரர்கள் இல்லாததால், அவர் பட்டத்து இளவரசி ஆனார். அவரது பெற்றோர்கள் இவருக்குப் பின்னர் ஒரு மகனைப் பெற்றிருந்தால், ஆண் தலைமை வாரிசு முறை கடைப்பிடிக்கப்பட்ட அக் காலத்தில், வாரிசு வரிசையில் எலிசபெத்திற்குப் பதவி கிடைக்காமலே போயிருக்கும். இவற்றையெல்லாம் தாண்டி, காலம் வழி அமைத்துக் கொடுக்க தந்தைக்குப் பின் அரச கட்டிலில் அமர்ந்தவர்தான் இரண்டாவது எலிசபெத் மகாராணியார். காலம் பதவியை மட்டுமன்றி, இவருக்கு வேறு பல பெருமைகளையும் பெற்றுக் கொடுத்தது.

- கிட்டத்தட்ட 70 ஆண்டுகள் ஆட்சி புரிந்த பெருமை.
- பிரிட்டிஷ் அரசவரலாற்றில் அதிகூடிய காலம் ஆட்சிக் கட்டிலில் அமர்ந்த பெருமை.
- வின்ஸ்ரன் சேர்ச்சில் உட்படப் பிரித்தானியாவில் 15 பிரதமர்களை ஆட்சியில் அமர்த்திய பெருமை.
- ஆபிரிக்கா, ஆசியா, ஐரோப்பியாமற்றும் பசுபிக் நாடுகளை உள்ளடக்கிய 32 'கொமென்வெல்த்' நாடுகளின் தலைவராக, பதினைந்து தடவைகள் பதவி வகித்த பெருமை.

– என்பனவாக மகாராணியாரின் பெருமைப் பட்டியல் நீண்டு கொண்டே போகிறது. இவை தவிர இவருக்கான நீண்டதொரு சிறுமைப் பட்டியலும் வரலாற்றில் பதிவாகியே உள்ளது.

இந்த அரச பரம்பரை செய்யும் 'அலப்பறைகளுக்கு' ஓர் அளவில்லை என்று சொல்லப்படுகிறது. தம் உயர்வைக் காட்டுவதற்காக, மற்றவர்களைத் தாழ்த்தி, நம் நாட்டின் சில ஜாதிமான்கள் செய்வதைவிட, பல நூறு மடங்குகளாய் இவர்கள் தம் போலிக் கௌரவத்திற்காக எதையும் செய்யத் தயங்க மாட்டார்கள் என்கிறார்கள்.

மறைந்த இளவரசி டயானாவின் 'மர்ம' மரணத்தின் பின்னால் இந்த அரச பரம்பரையின் கொடூரக் கரங்களும் இருந்ததாகப் பரவலாகப் பேசப்படுகிறது. பொய்மை நிறைந்த இவர்களின் அரச குடும்ப, போலி கௌரவ வாழ்க்கையை வெறுத்து, இவர்களின் அட்டூழியங்களைத் தாங்க முடியாமல், தனித்து நடைபோடத் தொடங்கிய டயானா, வேறொருவரைத் திருமணம் செய்யப் போகிறார் என்ற நிலையில், அவரது காதலருடன் விபத்தொன்றில் கொல்லப்பட்ட போது, அது இந்த அரச குடும்பத்தின் சதிதான் என்று பலரும் பேசினார்கள்.

மருமகளாய் வந்த டயானா வேறொருவரைத் திருமணம் செய்வதை ஏற்றுக்கொள்ளாத இந்த அரச குடும்பம், டயானாவின் மரணத்தின் பின் இன்றைய அரசராய்ப் பதவியேற்றிருக்கின்ற டயானாவின் கணவர் 'சார்ள்ஸ்' தனது பழைய காதலியான முதிய கமீலாவைக் கைபிடிக்க, தடையின்றி வழிவகுத்துக் கொடுத்தது. இந்தக் கதை தெரியாமல்தான் இங்கு சிலபேர் மேற்கு நாடுகளில் பெண்விடுதலை பேணப் படுவதாகச் சொல்லித் திரிகிறார்கள்.

எங்குதான் மாமியார் – மருமகள் சண்டை இல்லை என்று உங்களில் ஒருசிலர் அரச குடும்பத்திற்காக வக்காலத்து வாங்க வருவீர்கள். மருமகள் கதைதான் இது என்றால், இந்த அரச குடும்பம் வாரிசுகளில் ஆறாம் இடத்திலிருந்த அரசியின் பேரனான, 'ஹரி'யும் அரச குடும்ப அங்கத்தவராய் இருப்பதால் வரும் லாபங்களையெல்லாம் தூக்கி எறிந்து விட்டு, இன்று மனைவி மக்களுடன் கனடாவில் போய் சாதாரண ஒரு குடிமகனாய் உழைத்து நிம்மதியாய் வாழ்ந்து வருகிறார். அந்தக் குடும்ப அங்கத்தவராய் இருப்பதில் உள்ள சிரமத்தை உணர்த்த இது ஒன்று போதாதா?

எது எப்படியோ, மறைந்த அரசியார் தான் காதலித்துக் கைபிடித்த 'எடின்பெரோ கோமகன் பிலிப்புடன்' கடைசி வரை ஒன்றாய் வாழ்ந்து ஒழுக்கத்தை நிலைநிறுத்தியவர். அந்த ஒன்றிற்காகவே மறைந்த மகாராணியாரை நிச்சயம் பாராட்டலாம்.

**உலகநாதரின் ஒப்பீனியன்:- இந்தப் பாராட்டு மகாராணிக்கா? பிலிப்பிற்கா? ஹி.. ஹி..**

**2. கேள்வி:-**
தமிழரசுக் கட்சியின் மூத்த துணைத் தலைவர்களில் ஒருவரான சீ.வி.கே.சிவஞானம் அவர்களின் 'ஸ்பொட் லைற்' பேட்டியைப் பார்த்தீர்களா?

**பதில் :-**
மறைந்த பிரிட்டிஷ் இளவரசியான டயானா, அரச குடும்பத்தின் அட்டூழியங்களைப் பொறுக்க முடியாமல் அவர்களின் அதிகாரத்தை உடைத்துக் கொண்டு எப்படி வெளியே வந்தாரோ அதுபோலவே சீ.வி.கே. சிவஞானம் அவர்களும் தமிழரசுக் கட்சியினதும், கூட்டமைப்பினதும் பொய்மைகளைத் தாங்க முடியாமல் அவற்றை உடைத்துக் கொண்டு வெளியே வர முடிவு செய்துவிட்டார் என்பது அப் பேட்டியில் தெரிந்தது. இது அவரது புரட்சியின் ஆரம்பம்தான். இனிமேல்தான் முழுமையாய்த் தான் மனம் திறக்கப்போவதாய் வேறு அப்பேட்டியில் சொல்லியிருந்தார்.

வழக்கமாகத் தன் ஊர்க்காரரான 'மாவை'யை விட்டுக்



கொடுக்காத அவர், அப் பேட்டியில் சற்றுக் காரமாகவே மாவையை விமர்சித்த விதத்தைக் கொண்டு, அவராலும் இவர் மிக மனம் நொந்து போயிருக்கிறார் என்பதையும் உணர முடிந்தது. தனது உயர்வைச் சம்பந்தர் விரும்பவில்லை என்ற சம்பந்தர் மீதான விமர்சனம், எதிராளிகளுடன் சேர்ந்து நிற்கும் மாற்றுக் கட்சிகள் மீதான கண்டன விமர்சனம், ஒற்றுமை இழந்து நிற்கும் தன்கட்சி உறுப்பினர்கள் மீதான விமர்சனம் என துணிந்து அச்சமின்றி மனந்திறந்து அவர் பேசினார். அவர் பேச்சில் சுமந்திரன் மீதான ஆதரவு சிறிதாய் வெளிப்பட்டது போல் தெரிந்தது. அப் பேட்டியில் பழைய ஆணையாளர் சீ.வி.கே. சிவஞானத்தைக் காணமுடிந்தது.

பேட்டியில் சீ.வி.கே யிடம் காணப்பட்ட படபடப்பு சற்று எரிச்சல் தந்தது. பேட்டி கண்டவர்கள் கேள்வி கேட்டு வாய் மூடுவதற்கு முன்பு, தான் பதிலுரைக்க வாய்திறந்தார். ஏன் இந்த அவசரம் என்று தெரியவில்லை? கேள்வியை உள்வாங்கி நிதானமாய்ப் பதில் சொல்ல வேண்டாமா? அவசரப் பதில்கள் அறிவீனத்தின் அடையாளங்கள் ஆகும் என்று, அறிதல் வேண்டாமா? அவரது வயதுக்கும் அனுபவத்திற்கும் பொருத்தமாய் இச் செயல் இல்லை என்பது மட்டும் நிஜம்.

÷புரூட்டஸ்' உட்பட்ட ஒன்றாய் இருந்த நண்பர்கள் 'சீஸரை', வரிசையாய் நின்று ஒவ்வொருவராய்க் குத்திக் கொன்றது போல, கூட்டமைப்புத் தலைவர்களே கூட்டமைப்பைக் குத்திக் குதறுகின்றனர். இப்படியே போனால் என்னாகப் போகிறது கூட்டமைப்பு?

**உலகநாதரின் ஒப்பீனியன்:-சம்பந்தர் இப் பேட்டிகளையெல்லாம் கேட்பாரா? இல்லையா? கேட்டாலும் கேட்குமா? ஹி..ஹி..**

**3. கேள்வி:-**
ஆசியக் கிண்ண விளையாட்டுப் போட்டிகளில் நம் வீரர்கள் பெற்றிருக்கும் வெற்றி பற்றி?

**பதில் :-**
பொறுப்புடன் இருக்கவேண்டியவர்களால், உலக அரங்கில் பலவிதத்தாலும் கடகடவெனச் சரிந்து கொண்டிருந்த இலங்கையின் மதிப்பை, விளையாட்டுப் பிள்ளைகள் உயிர்கொடுத்து நிமிர்த்தி இருக்கிறார்கள். இலங்கைத்தாய் ஆனந்தக் கண்ணீரோடு மெல்லத் தலைநிமிர்த்திச் சிரிக்கிறாள். விளையாடுகிறவர்களிடம் இருந்த பொறுப்புணர்ச்சியைக் கண்டு மகிழ்வதா? அன்றேல் பொறுப்புடன் இருக்கவேண்டியவர்களிடம் இருக்கும் விளையாட்டுத் தன்மை கண்டு கவலையுறுவதா? என்று தெரியவில்லை. வீரர்களுக்கு எம் பாராட்டுக்கள்.

**உலகநாதரின் ஒப்பீனியன்:- நம் அரசியல்வாதிகள் இவ்விளையாட்டு வீரர்களை முன்னுதாரணமாய்க் கொள்வார்களாக!**

**4. கேள்வி:-**
ஐ.நா. மனித உரிமைக் கவுன்சில் கூட்டத்திற்கு நான் போகிறேன், நீபோகிறேன் என்று நம் தமிழ்த் தலைவர்கள் பலர 'அலப்பல்' பண்ணுவதைப் பார்த்தீர்களா?

**பதில் :-**
இதுநாள் வரை போய் என்னத்தைக் கிழித்தார்களாம்? இனிப்போய்க்; கிழிக்க! எல்லாம் வெற்று வாண வேடிக்கை தான். யார் பணத்திலோ தலைவர்களுக்குக் கிடைக்கப் போகும் சுற்றுப்பயண வசதி. அவ்வளவுதான்!

**உலகநாதரின் ஒப்பீனியன்:- திரைகடல் ஓடியும் திரவியம் தேடு! ... ச்சும்மா ச்சும்மா ஹி..ஹி..ஹி..**

**5. கேள்வி:-**
தங்களது தவறுகளைத் தட்டிக் கேட்கும் உரிமை சாணக்கியன் போன்றவர்களுக்குக் கிடையாது என்கிறாரே நாமல்?

**பதில் :-**
வேறு யாருக்காவது அந்த உரிமை இருக்கிறதா? என்பது முதற்கேள்வி. தவறுகள் செய்ததை ஒத்துக் கொள்கிறாரா? என்பது இரண்டாவது கேள்வி. வைக்கோல் போருக்குள்



ஒழிந்திருந்தவன் பகையாளியை இடிக்க, கையை நீட்டினாற் போல, சாணக்கியனை மட்டந்தட்ட நினைந்துத் தம்மை அடையாளப்படுத்தி இருக்கிறார் நாமல். உணர்ச்சிவயப் பாட்டில் பேசக்கூடாதென்பது இதற்குத்தான்.

**உலகநாதரின் ஒப்பீனியன்:- நாமலுக்கு இதெல்லாம் நோமலுங்கோ!**

காலைக்கதிர் Kalaikkathir

# கலை, இலக்கியத் திறனாய்வாளர் கே.எஸ்.சிவகுமாரனை இழந்தோம் !

## அஞ்சலிக்குறிப்பு

- முருகபூபதி -




இலக்கியத் திறனாய்வாளராகவும் ஊடகவியலாளராகவும் மொழிபெயர்ப்பாளராகவும் திகழ்ந்த எழுத்தாளர் கே.எஸ்.சிவகுமாரன் நேற்று முன்தினம் 15 ஆம் திகதி தமது 86 ஆவது வயதில் கொழும்பில் மறைந்துவிட்டார்.

இவரது மறைவை ஈடுசெய்யப்பட வேண்டிய இழப்பு என்றே நாம் கருதவேண்டும். அன்னாரின் வாழ்வையும் பணிகளையும் கூர்ந்து அவதானித்தால், அவரது வகிபாகம், ஈழத்து இலக்கிய உலகிற்கு குறிப்பாகவும். தமிழ் – ஆங்கில ஊடகத்துறையில் பொதுவாகவும் எத்தகைய தாக்கத்தினை ஏற்படுத்தியது என்பது தெரியவரும்.

சுமார் ஆறு தசாப்த காலம் எழுத்தூழியம் புரிந்துவந்திருக்கும் கே. எஸ். சிவகுமாரன், அந்திமகாலத்தில் உடல் நலம் குன்றியிருந்த வேளையிலும் முகநூல் வாயிலாகத் தொடர்ந்தும் பதிவுகளை வெளியிட்டு வந்தவர்.

மட்டக்களப்பில் 1936 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி பிறந்த சிவகுமாரன், புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளையின் மாணாக்கர். பாலுமகேந்திரா மட்டக்களப்பில் வாழ்ந்த காலத்தில் சச்சிதானந்தன் என்பவருடன் இணைந்து 'தேனருவி' என்ற கலை,இலக்கிய இதழை வெளியிட்டபொழுது, அதில் பல ஆக்கங்களை எழுதியிருக்கும் சிவகுமாரனின் ஒரு நூலுக்கு பாலுமகேந்திரா முன்னுரை எழுதியுள்ளார்.


சிவகுமாரனின் 'அசையும் படிமங்கள்' என்ற சினிமாத்துறை நூலின் முகப்பில் இந்தப் பால்யகாலத் தோழர்கள்தான் இணைந்து தோன்றுகின்றனர்.

மற்றவர்களின் படைப்புகளையும் அவர்தம் இலக்கியப் பணிகளையும் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்கு அப்பால் தமது பத்திகளில் அறிமுகப்படுத்தி வந்த சிவகுமாரன்தான் தமிழில் பத்தி எழுத்து என்னும் பிரயோகத்தை அறிமுகப்படுத்தியவர் என்ற தகவல் பலருக்குத் தெரியாது.

Thamil Writing in Srilanka, Aspects of Culture in Srilanka ஆகிய தமது நூல்களிலும் தமிழில் எழுதியிருக்கும் ஈழத்துச் சிறுகதைத் தொகுப்புகள், நாவல் இலக்கியம் தொடர்பான நூல் உட்பட பல நூல்களிலும் எம்மவர்களின் படைப்புகளைத் திறனாய்வு செய்து அறிமுகப்படுத்தியிருக்கும் இவரது இயல்பு ஏனையவர்களுக்கு குறிப்பாக விமர்சகர்களுக்கு முன்மாதிரியானது.

ஒரு நூலைப்படித்தால் அது இவரைக் கவர்ந்துவிட்டால் தாமதமின்றி ஆங்கிலத்திலோ தமிழிலோ அதனை அறிமுகப்படுத்தி, ஏதேனும் இதழில் எழுதிவிடுவார். அத்துடன் இலக்கிய உலகின் சமகால நிகழ்வுகளையும் இரண்டு மொழிகளிலும் தமது பத்திகளில் பதிவுசெய்துவிடுவார்.

இலங்கையில் நீண்டகாலம் வெளியான மல்லிகை, மற்றும் தற்போதும் வெளியாகும் ஞானம்






இதழும் கே.எஸ்.சிவகுமாரனை அட்டைப்பட அதிதியாக கௌரவித்து பாராட்டியுள்ளன. யாழ்ப்பாணத்திலிருந்து வெளியாகும் ஜீவநதி இவருக்காக பிரத்தியேகமாக தனிச்சிறப்பிதழும் வெளியிட்டுள்ளது.

இலங்கை வானொலி, த ஐலண்ட், வீரகேசரி முதலான ஊடகங்களிலும் பணியாற்றியவர். டெயிலிநியூசில் பத்தி எழுத்துக்களை எழுதினார். இலங்கை வங்கி உட்பட பல வர்த்தக ஸ்தாபனங்களிலும் மொழிபெயர்ப்பாளராக கடமையாற்றியவர்.

இலங்கை வானொலியின் தமிழ் வர்த்தகசேவையில் பகுதிநேர அறிவிப்பாளராகவும் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் மொழிபெயர்ப்பாளராகவும் செய்திப் பிரிவில் துணை ஆசிரியராகவும் சேவையாற்றிய கே.எஸ். சிவகுமாரன் இலங்கையில் அமெரிக்கத் தூதரக தகவல் பிரிவிலும் சிறிதுகாலம் பணியாற்றியிருக்கிறார். நவமணி இதழின் ஸ்தாபக ஆசிரியரும் இவரே.

கொழும்பில் மூன்று சர்வதேசப் பாடசாலைகளிலும் அமெரிக்கா, மாலைதீவு, ஓமான் ஆகிய நாடுகளிலுள்ள பாடசாலைகளிலும் ஆங்கில ஆசிரியராக பணியாற்றிய அனுபவம் இவருக்குண்டு. இலங்கை திரைப்பட தணிக்கை அதிகாரியாகவும் கடமையாற்றியவர். சிறுகதை, திறனாய்வு, பத்தி எழுத்துக்களில் மாத்திரம் கவனம்செலுத்தியவர் அல்லர். தரமான சினிமா பற்றிய பிரக்ஞையுடனும் இயங்கியவர்.

அசையும் படிமங்கள், சினமா ஒரு உலகவலம் ஆகிய இவரது நூல்கள் சினமா பற்றியவை. இந்தியாவில் நடந்த பல சர்வதேச திரைப்பட விழாக்களிலும் பங்குபற்றியவர்.

நாம் சினிமா என எழுதியபோது இவர் சினமா என்றே எழுதிவந்தவர்.

இத்தனை அனுபவங்களுக்குப் பின்னரும், தாம் இன்னமும் இலக்கியத்தில் கற்றுக்கொண்டிருக்கும் மாணவன்தான் என்று மிகுந்த கூச்சத்துடன் தன்னடக்கத்துடனும் சொல்லிக்கொண்டிருந்தவர்.

சிவகுமாரன் தன்னை ஒரு இலக்கிய விமர்சகன் என்று சொல்லிக்கொள்ள விரும்பாதவர். தான் ஒரு திறனாய்வாளன்தான் என்று எப்போதுமே அடக்கமாக சொல்லிக்கொண்டவர், சிறுகதைகளும் எழுதியிருக்கிறார். அத்துடன் ஆங்கிலத்திலும் தமிழிலும் கவிதைகளும் எழுதியவர்.

ஆயினும் ஒரு விமர்சகராக, திறனாய்வாளராக, பத்தி எழுத்தாளராக, மொழிபெயர்ப்பாளராகத்தான் வெளியுலகிற்கு அறியப்பட்டவர்.

இருமை, சிவகுமாரன் கதைகள் ஆகிய இரண்டு சிறுகதைத. தொகுப்புகள் இதுவரையில் வெளியாகியிருக்கின்றன. பெரும்பாலான இவரது கதைகள் உளவியல் சார்ந்திருக்கும்.

கே.எஸ்.எஸ்., பேராதனைப் பல்கலைக்கழக ஆங்கிலப் பட்டதாரி. தமது வாழ்நாளில் பெரும் பகுதியை இலக்கியத்திற்கும் ஊடகம் மற்றும் இதழியலுக்கும் மொழிபெயர்ப்பிற்கும் கல்வித்துறைக்கும் அர்ப்பணித்தவர். தன்னை எங்கும் எதிலும் முதனிலைப்படுத்திக்கொள்ள விரும்பாத அளவுக்கு அதிகமான தன்னடக்க இயல்புகொண்டவர்.

விமர்சகர்கள், விமர்சனத்துக்கும் கண்டனத்துக்கும் ஆளாகும் இயல்பினர் என்பதனாலோ என்னவோ தம்மை ஒரு திறனாய்வாளர் என்று சொல்லிக்கொள்வதில் அமைதி கண்டவர். எவரையும் தமது எழுத்துக்களினால் காயப்படுத்தத் தெரியாதவர்.

ஒருவரது குணம் அவரது இயல்புகளிலேயே பெரிதும் தங்கியிருக்கிறது. அமைதியான சுபாவம் கலந்துரையாடல்களிலும் உரத்துப்பேச விரும்பாத இயல்ப, மற்றவர்களின்







கருத்துக்களை பொறுமையாக செவிமடுக்கும் குணம் முதலானவையே அவரது மிகச்சிறந்த பலமாக இருந்தவை.

1983 வன்செயலில் அவரது வெள்ளவத்தை முருகன் பிளேஸ் வீடும் தாக்கப்பட்டது. அவர் மயிரிழையில் உயிர்தப்பினார். சில நாட்களில் தனது சில உடைமைகளை எடுத்துவருவதற்கு அவர் மீண்டும் திரும்பியபொழுதும் அந்த வீட்டருகே அந்தத் தீயசக்திகள் அடுத்த தாக்குதலுக்குத் தயாராகத்தான் நின்றார்கள்.

நான் எனது புத்தகங்களைத்தான் எடுக்க வந்தேன் – என்று இவர் சிங்களத்தில் சொன்னபொழுது, அவைதான் உமது வீட்டில் அதிகம் இருந்தன என்று அங்கு நின்ற ஒருவன் சொல்லியிருக்கிறான்.

அதனைக்கேட்டு அவருக்குச் சிரிப்பு வந்துள்ளது.

அந்த இழப்பிலும் அவரது முகத்தில் தவழ்ந்த புன்னகையினால் வெட்கித்துப்போன அந்த ரவுடிகள் 'சமாவெண்ட'(மன்னித்துக்கொள்ளுங்கள்) என்றார்களாம்.

இனி எதுவும் நடக்காது வீட்டில் வந்திருங்கள் – என்றும் சொல்லியிருக்கிறான் ஒரு ரவுடி.

இனி என்னதான் நடக்கவிருக்கிறது? என்று மனதிற்குள் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ சொல்லிக்கொண்டுதான் இந்த அறிவாளி வீட்டினுள் நுழைந்திருப்பார்.

அதன் பிறகும் நாட்டை விட்டுப் புலம்பெயராமல் அதே வெள்ளவத்தை முருகன் பிளேஸ் இல்லத்தில் தொடர்ந்தும் வாழ்ந்தவாறே இலக்கியப் பணியாற்றியவர்.

அத்தகைய ஆளுமையான கே.எஸ்.சிவகுமாரன் அவர்கள் நேற்று முன்தினம் 15 ஆம் திகதி சிந்திப்பதையும், எழுதுவதையும் நிறுத்திக்கொண்டு எம்மிடமிருந்து விடைபெற்றுவிட்டார்.

இனி எம்மிடம் எஞ்சியிருப்பது, அவர் பற்றிய நினைவு களும் அவர் விட்டுச்சென்றுள்ள படைப்புகளும்தான்.

சிரம் தாழ்த்தி அஞ்சலி செலுத்துகின்றோம்.

காலைக்கதிர் Kalaikkathir

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.



- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் - 125

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!



### பிரேமதாஸா

பிரேமதாஸா கொழும்பு மாநகராட்சி அரசியலில் பல காலம் இருந்தவர். அவருக்கு லலித் அத்துலத் முதலி, காமினி திஸநாயக்கா அல்லது அக்காலங்களில் ஐக்கிய தேசியக் கட்சியில் பலம் பொருந்திய உறுப்பினராக இருந்தவர்களின் மேல்தட்டு வர்க்கக் குடும்பப் பின்னணிகளோ அரசியல் சொந்தங்களோ இருக்கவில்லை. தனது மத்திய வர்க்க நிலைகளில் இருந்து, விடாமுயற்சியாலும் கட்சிக்கு விசுவாசமாக நடந்தும் முன்னேறினார். மாநகர அரசியலில் தேர்தலில் வென்றாலென்ன, நாடாளுமன்றத் தேர்தலானாலென்ன பிரேமதாஸா அந்த வெற்றியைக் கொண்டாட முதல் போகும் வீடு லீலா வணிக குழுமத்தின் பிதாமகன் அமரர் சின்னத்துரையின் வீடுதான். லீலா வணிகக் குடும்பம் எனக் குறிப்பிடுவது லீலா மளிகைக் கடைகள், கலண்டர்கள் வாணிபம் செய்த குடும்பத்தைத்தான். அமரர் சின்னத்துரையின் முன்மொழிவுடன்தான் பிரேமதாஸா தனது தேர்தல் வேட்புமனுக்களை முன்னெடுப்பது வழக்கம். அதைத்தொடர்ந்து கொழும்பு மாவட்டத்தின் பெருவாரியான தமிழ் வர்த்தகர்களின் முன்மொழிவுகளும் இருக்கும். தன்னை வளர்த்து ஆளாக்கியவர்களுக்கு நன்றிக் கடன் பட்டவராக செயல்பட்டு, கொழும்பு மாவட்டத்தின் நாடாளுமன்ற அங்கத்தினராகப் பல காலம் தொடர்ச்சியாகப் பிரதிநிதித்துவம் வகித்தார். இந்த மாவட்டத்தில் பலமான சிறுபான்மை வாக்குகள் இருந்தமையால் அந்த மக்களோடு இயற்கையான அவரது பழகும் இயல்பினால், நேசமான, நெருக்கமான, இணக்கமான உறவுகளில் இருந்தவர்.

ஜனாதிபதிப் பதவி என்றதும் பஞ்சலிங்கங்களை கொண்டு தனது நிர்வாகத்தை முன்னெடுத்தவர். தமிழ் மக்களுக்கு நியாயமான தீர்வு பெறப்பட வேண்டும் என அவர் சொல்லிக் கொண்டா லும், காலிமுகத்திடலில் பேசப்பட்டவை போல் எல்லா மக்களுக்கும் சம உரிமைகளும் சமத்துவமான வாழ்க்கையும், இனமத பேதம் இல்லாமல் கிடைக்க வேண்டும் என்பதே அவை.

ஆயினும் பிரேமதாஸா இந்திய ஒப்பந்தத்தை முழுமூச்சாக எதிர்த்தார். அதில் தமிழ் மக்களுக்கு ஒரு இனப்பிரச்சினை தீர்வின் அடிப்படைகள் இருந்தாலும், அது நியாயமானது என்பதில் அபிப்பிராயங்கள் தர இணங்கவில்லை. ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட வைபவத்துக்கோ அல்லதுராஜீவுக்காக அதன்பின் நடந்த விருந்துக்கோ நாட்டின் பிரதமராக பிரேமதாஸா பங்கு பற்றாது, தான் அப்படிப் பங்குப் பற்றாதுமைக்கு 'நான் எனது நாட்டை மதிக்கும் நேரத்தில் எனது நாட்டை அவமதித்த இன்னும் ஒருவரை மதிக்க முடியாது. இந்தியா எங்களது நாட்டின் இறைமையை மதிக்காது, மீறி, தமிழ்ப் பகுதிகளில் உதவிப் பொட்டலங்கள் வீசியதால்தான் அந்த நாட்டை ஸ்ரீலங்காவின் குடிமகனாக மதிக்க முடியாது' - என விளக்கம் தந்தவர்.

இந்தியாவோடு கடும் நிலையில் நிற்க பிரேமதாஸாதான் சரியானவர் என ஜே.ஆரும், அவரது மகன் ரவி ஜெயவர்த்தனவும் அபிப்பிராயப்பட்டு, மற்றவர்கள் பின் தள்ளப்பட்டார்கள்.

பிரேமதாஸாவின் பின்னணிகளால் அவர் சாதாரணமான குடிமகனுக்கு நெருக்கமானவர். அவர்களது அபிலாசைகளை அறிந்தவர் என்ற பெருமளவு அபிப்பிராயம் எல்லோர் மத்தியிலும் இருந்தாலும், அந்தச் சாதாரண மனிதன் சிங்கள, பௌத்த கோட்பாடுகளையும் அவர்களது அபிலாசைகளையும் கூட உள்ளகத்தில் வைத்திருந்தார்.



அந்த அபிலாசைகளின் உந்துதலிலும் சிங்கள, பௌத்த பேரோண்மை களைத் திருப்திப்படுத்தும் விதத்திலும் அவரது பதவியேற்பு வைபவத்துக்கு கண்டி தலதா மாளிகை தான் தேர்ந்தெடுக்கப்பட்டது. அது சிங்கள, பௌத்த பேரினவாதத்தின் இருதயமாக இயங்கிய புனித வழிபாட்டுத் தலம். இதனால் அவர் சிங்கள, பௌத்த அபிலாசைகளுக்கு மாறாக நடக்க மாட்டார் என்ற நம்பிக்கை பெரும்பான்மை மக்களிடம் இருந்தது. கண்டிய மன்னர்களும் அவர்களது ராஜதானியும் கடைசி வரை ஏகாதிபத்தியங்களுக்கு அடிபணியாது போரிட்டவை. ஆகவே, தான் கூட ஏகாதிபத்திய ஆதிக்கம் ஸ்ரீலங்காவில் ஏற்பட விடமாட்டேன் என பிரேமதாஸா சிங்கள, பௌத்த பேரினவாதத்திற்கு உறுதியளிக்கவே தனது வாழ்நாளின் முக்கிய தினத்திற்கு இந்த இடத்தைத் தேர்ந்தெடுத்தார் என அரசியல் கருத்துக்கள் அலையோடின.

இதுபோலவே கோட்டாபய தனது பதவியேற்பு வைபவத்திற்கு தமிழர் விரோதியான துட்டகைமுனுவினால் கட்டப்பட்ட ருவன்வெலிசயா வைத் தேர்ந்தெடுத்து, சிங்கள, பௌத்த மக்களுக்கும் சிறுபான்மையினருக்கும் தனது செய்தியைச் சொன் னார்.

### இந்திய படைகளின் வெளியேற்ற அறைகூவல்

02 ஜனவரி 1989 தலதா மாளிகையில் இருந்து நாட்டு மக்களுக்கு செய்தி தந்த போது ஜனாதிபதி பிரேமதாஸா அவரது தாரக மந்திரமான மூன்று ஸீகள் (Consulta tion, Com promise and Consensus –அதாவது ஆலோசனை, சமரசம், ஒருமித்த கருத்து) என்ற நீதியிலேயே பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என அறிவுறுத்தி, ஜே.வி.பி., விடுதலைப் புலிகள் இரு பகுதியினரையுமே பேச்சு மேசைக்கு அழைத்தார். இந்தியாவுக்கும் ஒரு செய்தியாக ஸ்ரீலங்கா வின் இனப்பிரச்சினை உள்நாட்டுப் பிரச்சினை, அந்த மக்களாலேயே அது தீர்க்கப்பட வேண்டும், இதற்கு மூன்றாம் தரப்புகள் தேவையில்லை என்பதும் வெளிப்படுத்தப்பட்டு, தான் கடைசி வரைக்கும் நாட்டில் எந்த பகுதியிலும் ஓர் அங்குல பிரதேசத்தில் கூட மூன்றாம் தரப்பு காலூன்ற விடமாட்டேன் எனச் சூளுரைத்தார். ஜனாதிபதி பிரேமதாஸா இந்தியா வுடன் மோதநிலையைத்தான் தேடுகிறார் என்ற செய்தியை விடுதலைப் புலிகள் கணித்தனர். அந்த நேரத்தில் இந்தியப் படைகளின் தாக்குதலாலும் சர்வதேசம் விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டிற்கு எதுவித ஆர்வங்களும் காட்டாததாலும் விடுதலைப் புலிகளும் இக்கட்டான நிலைகளிலேயே இருந்தனர்.

இந்தியப் படைகளைப் பாரமாகக் கருதி, சைக்கிளில் இருந்த வாழைக் குலையாய் ஏதோ ஒரு வழியில் பிரேமதாஸாவுடன் சேர்ந்து வெளியேற்றி விட்டால் அது அவர்களுக்கு நன்மையானது என மதியுரைஞர் பாலசிங்கமும் கணக்கிட்டார். அப்படி இந்தியப் படைகளை வெளியேற்றினால் தங்களது ஏகோபித்த அதிகாரத்துக்கு அவர்கள் ஆயுத பலத்துடன் விளங்குவதால் எதிர்ப்பு இருக்காது என்பது விடுதலைப் புலிகளின் கணக்கீடு.



விடுதலைப் புலிகளுக்கும் ஜே.வி.பிக்கும் நம்பிக்கை தரும் விதத்தில் ஜனாதிபதி பிரேமதாஸா அவசரகாலச் சட்டத்தை மீள் வாங்கி, சிறையில் இருந்த ஜே.வி.பி. அங்கத்தினர்கள் 1,800 பேரை விடுதலை செய்து, இவை ஜே.வி.பிக்கு நம்பிக்கையூட்டுமென எதிர்பார்த்தார். சில மாதங்கள் ஜே.வி.பி. தங்களது தாக்குதல்களை நிறுத்தினாலும், விடுவிக்கப்பட்ட அங்கத்தினர்களின் உதவியுடன் திரும்பவும் பலத்த தாக்குதல்களைத் தர, ஜனாதிபதி பிரேமதாஸா ஜே.வி.பியுடன் அந்த வழி சரிவராது என்று திட்டமிட்டு, இந்தியப் படைகளின் வெளியேற்றத்துக்கு விடுதலைப் புலிகளின் ஆதரவைத் தேட வேண்டுமென ஆயத்தங்கள் செய்து, லண்டனில் இடைப்பட்டோர் மூலம் மதியுரைஞரைத் தொடர்பு கொண்டு பேச்சுவார்த்தைக்கு அழைத்தார்.

அதற்கு விடுதலைப் புலிகள் வைத்த முன்நிபந்தனை இந்திய படைகள் வெளியேற்றப்பட வேண்டும் என ஜனாதிபதி பிரேமதாஸா வெளிப்படையாக அறிவித்தல் தர வேண்டும் என்பதுதான். (வளரும்)

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 16.09.2022இல் வெளியிடப்பெற்றது.